# தளிர்

## மிட்ஸ் தளிர்கள் உலகம்

(குழந்தைகளுக்கான சிறப்பு கல்வி திட்டம்)

மார்த்தாண்டம் மறைமாவட்டம்

தொடர்பு இதழ் – டிசம்பர் – 2016

(தனிசுற்றுக்கு மட்டும்)

# பலவீனங்களே பலமானால்...

அன்பு தளிர்களே, நாம் வாழும் இந்த உலகில் பல்வேறு விதமான மனிதர்கள் வாழ்கின்றனர். பலசாலிகள், திறமையானவர்கள், செல்வந்தர்கள், ஊனமுற்றவர்கள், ஏழைகள் என பலதரப்பட்ட மக்கள் வாழும் இந்த சமுதாயத்தில் ஏதாவது ஒரு வகையில் நாம் பலவீனர்களாகவே வாழ்கிறோம். ஆனால் அந்த பலவீனத்தை பலமாக மாற்றி வாழ்க்கையை எதிர்கொள்ளும் போது வெற்றிகள் நம்மை வந்து சேருகின்றன. ஒரு சிறுவன் விபத்தில் தன் இடது கையை இழந்து விட்டான். கை இல்லையே என்று சோர்ந்து விடாமல் தன்னம்பிக்கையோடு அந்த பகுதியிலேயே புகழ்பெற்ற ஜூடோ பயிற்சியாளரிடம் சேர்ந்து பயிற்சி பெற்றான். சில மாதங்களிலேயே போட்டியை எதிர்கொண்டான். புகழ்பெற்ற பல வீரர்களை வீழ்த்தி இறுதி போட்டிக்கு முன்னேறினான். இறுதிபோட்டியில் இச்சிறுவன் எதிராளியிடம் அடி பட்டு இறந்து விடுவானோ என்று அனைவரும் பயந்த வேளையில் மிகவும் அற்புதமாக எதிராளியை மடக்கி வெற்றி வாகையை சூடினான். அவன் வாகை சூட காரணம் அவன் கொண்டிருந்த தன்னம்பிக்கையும், பலமும் தான். எனவே அன்பு குழந்தைகளே, நாம் வாழும் இந்த சமூகத்தில் வெற்றி பெற வேண்டுமானால் கடின உழைப்பு மிகவும் முக்கியமானது. தோல்விகளோ, இழப்புக்களோ வரும் போது அதை குறித்து வருந்தாமல் நம்பிக்கையோடு எதிர்நீச்சலிட்டு வெற்றி பெற வாழ்த்துகிறேன். பலவீனங்களை பலமாக்கி கொண்டால், வெற்றி நிச்சயம்!

**அனைவருக்கும் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்...**

அருட்பணி. பீட்டர் பெனடிக்ட் ராஜன்,
இயக்குநர்





# நாளைய நல்வாழ்வு இன்று துவங்குகிறது...

அன்பு இளம் நெஞ்சங்களே, நாம் வாழும் இவ்வுலகம் பற்பல நன்மைகளை உடையது. எது தேவையோ அதை காண்பதும், புரிந்து கொள்வதும், தேர்வு செய்வதும் நம் கையில் தான் உள்ளது. நமக்கு வழங்கப்பட்டுள்ள வாழ்நாளில் உகந்த, உயர் வாழ்வுக்கு தேவையான நன்மையை தகுந்த காலத்தில் இனம் கண்டு கொள்ளுதல் இன்றியமையாதது. இல்லையெனில் பள்ளிக்கூடம் செல்லாத முதியவர் முதுமை பருவத்தில் உயர்கல்வி கற்க முயல்வது போல் இருக்கும். தளிர்கள் உலகம் திட்டம் வாயிலாக குமரி மாவட்டத்தில் உள்ள மாணவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கும் முயற்சி சிறப்பாக நடைபெறுகிறது. இளம் முத்துக்களாகிய நீங்கள் வாழ்வின் இலட்சியத்தை புரிந்து கொள்ள இது பெரிதும் உதவி செய்கிறது என்பதில் ஐயமில்லை. இடைவிடாமல் சிந்திக்கவும், தன்முடிவில் உறுதியாய் நிற்கவும் மனத்திடன் கொண்ட ஒருவன் தன்னை அறியாமலேயே உயர் வாழ்வை அடைகிறான். எனவே நல்வாழ்வின் விதைகளை இன்றே விதைப்போம், காரணம் நாளைய நல்வாழ்வு இன்று துவங்குகிறது. *நல்வாழ்த்துக்கள்...*

அருட்தந்தை ஜீன்ஜோஸ், மண்டல இயக்குநர், நாகர்கோவில்

# குழந்தை பருவத்தை கொண்டாடுவோம்...

குழந்தை பருவம் வாழ்வில் மிகவும் மகிழ்ச்சிகரமான பருவமாகும். குழந்தைகள் எதைபற்றியும் கவலைப்படுவதில்லை. குழந்தைகளின் தேவைகளை மிகவும் கவனமுடன் நிறைவேற்றும் பெற்றோர், பள்ளிக்கூட நண்பர்கள், அறிவை அதிகரிக்க உதவும் ஆசிரியர்கள் மற்றும் நல்ல பள்ளிகூடங்களில் படிக்கும் வாய்ப்புகள் போன்றவை பல குழந்தைகளுக்கும் கிடைப்பதில்லை.

நாம் நம் ஒவ்வொரு அசைவிலும் மகிழ்ச்சியை அனுபவிக்கிறோம். ஆனால் இந்த மகிழ்ச்சி நிலையானதாக எல்லையோடு இருக்க வேண்டும். குழந்தைகளுக்கு அதிக சுதந்திரம் கிடைக்கிறது. அதே நேரத்தில் அந்த சுதந்திரத்தை தவறாக பயன்படுத்தாமல் பொறுப்பணர்வுடனும் நடந்து கொள்ள வேண்டும். அதாவது அன்றாடம் எடுக்கும் பாடங்களை படிப்பது, வீட்டுப்பாடங்களை ஒழுங்காக செய்வது, பெற்றோருக்கு வீட்டு வேலைகளில் முடிந்த அளவு உதவி செய்வது, ஏழை குழந்தைகளுக்கு தேவையான உதவிகள் செய்வது போன்ற கடமைகளை நாம் தவறாமல் செய்ய வேண்டும். அடிக்கடி நாம் இந்த கடமைகளில் கவனம் செலுத்தாமல் தவறி விடுகிறோம்.

பெற்றோர் இந்த எல்லைகளும், கடமைகளும் கொடுத்திருப்பது குழந்தைகளை துன்புறுத்துவதற்கு அல்ல மாறாக பயிற்சி அளிப்பதற்காக தான். வாழ்க்கையை வெற்றிகரமாக கொண்டு செல்ல நல்லது எது, கெட்டது எது என்று பிரித்தறியும் திறனையும், தங்கள் கடமைகளை குறித்தும் குழந்தைகள் கட்டாயமாக தெரிந்து வைத்திருக்க வேண்டும். இந்த ஒழுங்கு முறைகளும், தினசரி கடமைகளும் குழந்தைகள் மீது அன்பில்லாததால் அளிக்கும் தடைகள் அல்ல. மாறாக ஒரு கட்டிடத்திற்கு நல்ல தரமான பொருட்களை கொண்டு அடித்தளம் அமைப்பது போல இந்த பொறுப்புகள் மற்றும் ஒழுங்குகளை சிறப்பான முறையில் கடைபிடித்தால் தான் சிறு வயதிலேயே வாழ்க்கை என்ற எதிர்கால கட்டிடத்திற்கு சிறந்த அடித்தளம் அமைக்க முடியும். நல்ல பயனுள்ள இந்த ஒழுங்குமுறைகளை ஏற்றுக்கொண்டு வாழ்வில் கடைபிடித்தால் நம் எதிர்காலம் வெற்றிகரமானதாக அமையும். மக்கள் நல்ல குணமுள்ள மனிதர்களிடமே நட்பு வைத்துக் கொள்ள விரும்புகிறார்கள். எனவே, முக்கியமாக நம் தளிர்கள் உலக குழந்தைகள் மனித மாண்பை புரிந்து கொண்டு பிறரிடம் இரக்கம் காட்டுபவர்களாக வாழ வேண்டும். சமூகத்தில் பண்புள்ள பிள்ளைகளாக வளர வேண்டும். தளிர்கள் உலக திட்டம் உங்களுக்கு தந்த இந்த சிறந்த வாய்ப்பை பயன்படுத்தி உங்கள் ஆளுமை திறனை வளர்த்து வருங்காலத்தில் சிறந்த கொடையாளிகளாக மாறி இந்த சமுதாயத்தை மாற்ற வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

ஷாஜன் ஜோசப், திட்ட அலுவலர்

# ஊக்கப்படுத்துதல் பயிற்சி

நாள் : மேய் 21, 2016
கலந்து கொண்டவர்கள் : 9 & 11 -ம் வகுப்பு மாணவர்கள்

## பயிற்சியின் சில துளிகள்...

படிப்பதற்கு தேவையானவை...... நீங்கள் எழுதியவை

### ➢ ஞாபக திறன்

**ஞாபக திறனை வளர்க்காமல் இருந்தால் ஏற்படும் விளைவுகள் :**

- தேர்வை நன்றாக எழுத முடியாது
- நல்ல மதிப்பெண் கிடைக்காது
- தேர்வு நேரத்தில் பயம் ஏற்படும்.
- ஆசிரியர் கேள்வி கேட்கும் போது பதிலளிக்க இயலாத சூழ்நிலை ஏற்படும்
- படிப்பதை மறப்பதினால் பயம் ஏற்படும். அதனால் நோய் ஏற்படும்
- பள்ளிக்கு செல்ல பயம் ஏற்படும்.
- தோல்வி நேரிடும். அதனால் படிக்கும் மனநிலை வராது.
- நமது இலட்சியத்தை நம்மால் அடைய முடியாது.
- தொலைக்காட்சியை பார்த்து பார்த்து படிப்பதனால் படிப்பதை மறக்க நேரிடும். இதனால் படிப்பில் கவனம் செலுத்த முடியாது.
- படிப்பதை அரைகுறையாக படிப்பதனால் மனதில் ஒன்றும் நிற்காது.

**படிப்பதை மறக்காமல் இருப்பதற்கான வழிமுறைகள் :**

- புரிந்து படிக்க வேண்டும்
- படித்ததை எழுதி பார்க்க வேண்டும்.
- சந்தேகம் ஏற்படுவதை ஆசிரியரிடம் தயக்கமின்றி கேட்க வேண்டும்
- இரவு படித்ததை மறுநாள் காலையில் ஒருமுறைகூட திருப்பிப் பார்க்க வேண்டும்.
- படித்ததை பிற மாணவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும்.
- ஆசிரியர் பாடம் நடத்தும்போது கவனமாக கேட்க வேண்டும்.
- எடுத்த பாடத்தை பலமுறை வாசிக்க வேண்டும்.
- படிக்கும்போது வேறு ஒன்றிலும் ஆர்வம் காட்டக் கூடாது.
- படிப்பதை ஆர்வத்தோடு படிக்க வேண்டும்.
- படிப்பதை நன்றாக படித்தால் நாம் நினைக்கின்ற இலட்சியத்தை நம்மால் அடைய முடியும்.
- அமைதியான இடத்தில் இருந்து படித்தால் படிப்பது எளிதாக புரியும்.
- நாம் படிப்பதை அரைகுறையாக படிக்கக் கூடாது.




ராமு : 10 ரூபாய் இருந்தா கொடு
சோமு : என்னிடம் சுத்தமா ரூபாய் இல்லை
ராமு : பரவாயில்லை, கொடு நான் சுத்தம் செய்து கொள்கிறேன்.

நோயாளி : டாக்டர் நீங்க ஆபரேசன் பண்ணும் போது பச்சை துணி கட்டி கொண்டு வராதீர்கள்.
டாக்டர் : ஏன்? எதற்காக அப்படி சொல்கிறீர்கள்
நோயாளி : மேலே போவதற்கு பச்சைக்கொடி காண்பிப்பது போல் உள்ளது.

**ஆர்.எஸ்.ரீஜா,** 8-ம் வகுப்பு குழித்துறை

## உற்றுநோக்குதல்

**விளைவுகள் :**

- கவனித்தால் நன்றாக படிக்கலாம்.
- கவனித்தால் வினாக்கள் எளிமையாக இருக்கும்.
- கவனித்தால் படிக்க நல்ல ஆர்வம் வரும்.
- கவனித்து படித்தால் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற முடியும்.
- புரிந்து படிப்பது நல்லது.
- வகுப்பில் ஆசிரியர் நடத்தும் பாடங்களை எந்தவித இடையூறுமின்றி கவனிப்பதின் மூலம் உற்று நோக்குதல் திறனை வளர்ச்சியடைய செய்யலாம்.
- வினாக்களை கவனித்து படித்தால் அதன் விளைகளையும் எளிதில் எழுத முடியும்.
- யோகா செய்யும்போது அமைதியாக இருந்து செய்தால் உற்று நோக்கு திறனை வளர்க்க முடியும்.

**எதிர்விளைவுகள்:**

- கவனிக்காமல் இருந்தால் படிக்க முடியாது.
- கவனிக்காமல் இருந்தால் வினாக்கள் கடினமானதாக இருக்கும்.
- படிக்க ஆர்வம் கிடைக்காது.
- புரிந்து படிக்கவில்லையென்றால் எளிதில் மனதில் பதியாது.
- வகுப்பில் ஆசிரியர் நடத்தும் பாடங்களை கவனிக்கவில்லையென்றால் உற்று நோக்குதல் திறனை வளர்ச்சியடைய செய்ய இயலாது.
- வினாக்களை உற்று நோக்கவில்லை யென்றால் சரியான விடையை எழுத முடியாது.
- யோகா செய்யும்போது இடையூறு இருந்தால் உற்று நோக்கும் திறனை வளர்க்க இயலாது.

## கவனிக்கும் திறன்

### கவனிக்காவிட்டால் ஏற்படும் நன்மை தீமைகள்

**நன்மைகள் :**

- ஆசிரியர் பாடம் நடத்தும் போது நாம் கவனித்தால் அந்த பாடம் எளிதில் புரியும்.
- ஆசிரியர் பாடம் நடத்தும் போது வேறு எந்த சிந்தனை களையும் மனதில் கொண்டு வராமல் கவனித்தால் அந்த பாடம் எளிதில் புரியும்.
- நாம் கவனித்தால் நம் படிப்பு மேலும் மேலும் வளரும்.
- நாம் கவனித்தால் நம் இலட்சி யத்தை அடைய முடியும்.
- நாம் கவனித்தால் வீட்டில் போய் அந்த பாடத்தை திருப்பி பார்க்கும் போது எளிதில் புரியும்.
- நாம் கவனித்தால் நாம் எதிர்பார்க்கும் மதிப்பெண் கிடைக்கும்.

**தீமைகள்:**

- ஆசிரியர் பாடம் நடத்தும் போது நாம் கவனிக்காமல் இருந்தால் நமக்கு பாடம் புரியாது.
- கவனிக்காவிட்டால் நம் படிப்பு மேலும் மேலும் பாதிக்கப்படும்.
- நாம் கவனிக்காமல் இருந்தால் நம் இலட்சியத்தை அடைய முடியாது
- நாம் கவனிக்காமல் இருந்தால் நாம் எதிர்பார்க்கும் மதிப்பெண் கிடைக்காது.
- நாம் பாடத்தை கவனிக்காமல் இருந்தால் நாம் வீட்டில் போய் அந்த பாடத்தை திருப்பி பார்க்கும் போது அந்த பாடம் நமக்கு புரியாது.
- கவனிக்காமல் இருந்தால் ஆசிரியர் நம்மிடம் வினா எழுப்பும் போது நமக்கு சரியான விடை அளிக்க முடியாது.
- நாம் கவனிக்காமல் இருந்தால் ஆசிரியர் நமக்கு தந்து விடும் வீட்டு பாடங்களை சரியாக எழுதி வர முடியாது.
- கவனிக்காமல் இருந்தால் மதிப்பெண் குறையும் இதனால் பெற்றோரின் கோபத்திற்கு ஆளாகிறோம்.
- தேர்வு நேரத்தில் சிந்தனை தவறினால் தேர்வு எழுத நேரம் கிடைக்காது.

## சிந்தனை தவறாமல் இருக்க செய்ய வேண்டிய செயல்கள்

- படிக்கும் போது சிந்தனை தவறினால் வேறு ஏதாவது செயல்களில் ஈடுபட்ட பின் படிக்கலாம்.
- உடற்பயிற்சி, யோகா செய்வதால் மனதை ஒருநிலைபடுத்துவதோடு படிப்பில் அதிக கவனம் செலுத்தலாம்.
- பாடத்தில் புரியாமல் இருக்கும் பகுதியை ஆசிரியரிடம் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

## தகவல் தொடர்பு நன்மைகள்

- நாம் சந்தேகங்களை ஆசிரியரிடம் கேட்பதனால் அறிவு தெளிவு ஏற்படும்.
- மேடை ஏறி பேசுவதால் நமக்கு பேச்சுத்திறன் மேம்படும்.
- நம் நண்பர்களுக்கு தெரியாத சந்தேகங்களை சொல்லிக் கொடுக்கும் போது நமக்கு அறிவுத்திறன் வளரும்.
- பிறரிடம் பேசுவதால் பல உண்மைகள் வெளிப்படும்.

**மேலே குறிப்பிட்ட அனைத்தும் நீங்கள் எழுதியவை. படித்து முன்னேற வேண்டும் என்ற அறிவு தெளிவு உங்களிடம் உள்ளது. அடிக்கடி இதை படித்து உங்களை புதுப்பித்துக்கொள்ளுங்கள். வாழ்த்துக்கள்.**







மாதந்தோறும்...
2015-ம் ஆண்டின் தொடர்ச்சியாக...

- ஸ்போக்கன் இங்கிலீஷ்
- தாய்மொழியில் தெளிவு.
- பொது அறிவு

## பேராசை பெரு நஷ்டம்



ஓ ஊரில் அமுதன் என்னும் மனிதன் வாழ்ந்து வந்தான். அவன் பிற உயிர்களை மதிக்க மாட்டான். மீன், ஆமை போன்ற சிறு உயிரினங்களை ஆறுகளிலிருந்து பிடித்து உண்டு வாழ்ந்தான். ஒரு நாள் அமுதன் தன் வீட்டுக்கு அருகிலுள்ள ஆற்றில் மீன் பிடிக்க வலையுடனும், தூண்டிலுடனும் சென்றான். முதலில் அவன் வலை வீசிய போது ஒரு பெரிய மீன் அவனது வலையை கிழித்து விட்டது. அவன் வலையை வெளியே இழுத்த போது மீன் ஒன்றும் இல்லாமல் வலை கிழிந்திருப்பதை கண்டான். ஏதோ பெரிய மீன் தான் வலையை கிழித்திருக்கலாம் என நினைத்து மீண்டும் ஆற்றில் தூண்டிலைப் போட்டான். தூண்டிலில் சாதாரணமான ஆற்று மீன் ஒன்று சிக்கியது. உடனே அவன் அதை தன் கையில் வைத்து அமுதன் அதைப் பார்த்து புன்சிரித்தான். சிறியதோ, பெரியதோ ஒரு மீனாவது கிடைத்ததே என நினைத்து மகிழ்ந்தான். அந்த மீன் வலியால் அவனிடம் பேசத் தொடங்கியது. மீன் அவனிடம் உன் பெயர் என்ன என்று கேட்டது. அவனும் அமுதன் என்றான். உடனே அது அமுதா நான் சொல்வதை நீ பொறுமையுடன் நிதானமாக கேள். நான் இப்பொழுது ஒரு சிறிய மீன். ஆதலால் நீ என்னை இப்பொழுது கொன்று உண்டால் உனக்கு பயனில்லை. ஆனால் நீ என்னை கொல்லாது இந்த ஆற்றில் மீண்டும் விட்டு விட்டால் நான் வளர்ந்து பெரிய மீனாக மாறியவுடன் நீ வந்து தூண்டில் போட்டால் நான் உன்னிடம் கிடைப்பேன். நீயும் என்னை எளிதாக உண்ணலாம் என்றது. அவன் உடனே பேராசை கொண்டு அதை மீண்டும் ஆற்றில் விட்டு விட்டான். இவ்வாறு அந்த மீன் அந்த மனிதனை அவன் பேராசையினாலே வென்று அவனிடமிருந்து தப்பித்து உயிர் பிழைத்தது. அவனின் பேராசையே அவனை ஏமாளியாக மாற்றியது.

எஸ்.பி.அபர்ணா, 5-ம் வகுப்பு, அனக்கரை

## தாய்மார்களுக்கு அறிவூட்டல்

- குழந்தைகள் வளர்ப்பு முறை
- மேற்படிப்புக்கான வழிகாட்டல்கள்
- கோழி வளர்ப்பு
- தொழில் முனைவோர் பயிற்சி
- சமுதாய விழிப்புணர்வு பாடல்கள்
- இயற்கை தானியங்கள்
- வீட்டுத்தோட்டம்

## Christmas Celebration 2015







## Mothers Training



## AASTHI 2016 (விடை பெற்றவர்களின் சந்திப்பு)

| | | |
|---|---|---|
| சந்தித்த நாள் | : | **அக்டோபர் 12, 2016** |
| சந்தித்தவர்கள் | : | **30 நபர்கள்** |
| கருத்தரங்கு | : | **இன்றைய இளைஞர்கள்** |
| கருத்தூட்டியவர் | : | **திரு.லியோ பிறைட் சிங்** |

**கருத்துக்களில் சில...**

- நிஜத்தை நிஜமாக பார்ப்போம்.
- நீ நீயாக இரு.
- உன்னை சுற்றியிருப்பவர்களிடம் புன்னகைக்க மறவாதே
- உன்னுடைய நடத்தையை மதிப்பீடு செய்
- பிரச்சினைகளை அறிவியல் பூர்வமாக மதிப்பீடு செய்.
- சமூக கடமையை புரிந்துகொள்.
- மனிதாபிமானத்தை வளர்த்துக்கொள்.
- சமூகத்திற்கு உன்னால் முடிந்த நல்லதை செய்.

## 2016-ன் திட்டத்திலிருந்து விடைபெற்றவர்கள்

நாள் : **ஜுன் 10, 2016**

| | | |
|---|---|---|
| 12-ம் வகுப்பு முடித்தவர்கள் | : | **19** |
| வழங்கப்பட்ட சிறு சேமிப்புத்தொகை | : | **ரூ.2,58,464/-** |
| அதிகப்பட்ச சிறு சேமிப்புத்தொகை | : | **ரூ.16,771/-** |
| வங்கி இருப்பு | : | **ரூ.1,84,234/-** |

# AASTHI 2016







## பொங்கல் விழா



| | |
|---|---|
| நாள் | : ஜனவரி 16, 2016 |
| சிறப்பு விருந்தினர்கள் | : திரு.மேத்யூ & திருமதி.ஹாயிசா பாக்ஸ், ஆஸ்திரேலியா<br>ஆர்ச்சர் குடும்பம், ஆஸ்திரேலியா,<br>திருமதி. கிறிஸ்டினா, போர்ச்சுகல்,<br>திரு. ஆன்றனி போர்டர், ஆஸ்திரேலியா |
| நடைபெற்ற போட்டிகள் | : கிரிக்கெட் & பாடல் போட்டி |









## நகைச்சுவை

தங்க செயினை உருக்கினா தங்கம் வரும்
வெள்ளி செயினை உருக்கினா வெள்ளி வரும்
சைக்கிள் செயினை உருக்கினா சைக்கிள் வருமா?

ஒருவர் : காலங்கள் மாறலாம் கனவுகள் மாறலாம் நெஞ்சங்கள் மாறலாம் நினைவுகள் மாறலாம் நட்பு என்றும் மாறாது.

மற்றொருவர் : அடபோப்பா! இதெல்லாம் நான் சொன்னா சிரிச்சிடுவாங்க

**வி.அனுஜா**, உண்ணாமலைகடை

## விடுகதைகள்

1.கன்னி ஒருத்திக்கு முப்பத்திரண்டு காவலாட்கள் அவள் யார்?
2.அம்மா புடவையை மடிக்க முடியாது, அப்பா பணத்தை எண்ண முடியாது அது என்ன?
3.கண் காண உருவம் உண்டு கட்டி பிடிக்க உருவம் இல்லை அது என்ன?
4.கண் சிமிட்டி மணி அடித்து கண்ணீர் வடிப்பர் அவர்கள் யார்?
5.கண்ணுக்கு தெரியாதவன் கண்ணை மறைப்பான் அவன் யார்?
6.கண்டு காய் காய்க்கும் காணாமல் பூ பூக்கும் அது என்ன?
7.கண்டு பூ பூக்கும் காணாமல் காய் காய்க்கும் அது என்ன?
8.கண்ணாடி கூண்டு காற்றிலே பறக்குது கையால் தொட்டால் காணாமல் போகுது அது என்ன?
9.கண்ணுக்கு தெரியாததை கணப்பொழுதில் காட்டிடும் அது என்ன?
10. வெள்ளை கோட்டைக்குள் இரண்டு ராஜாக்கள் அது என்ன?



**எஸ்.சுமித் ரிச்சர்ட்**, தேமானூர்

(விடுகதைகள் விடை பக்கம் 8)

# தளிர்கள் உலக உறுப்பினர்களின் படைப்புகள்



## அம்மா



என் விழிகள் இரண்டும் திறக்குமுன்பே
எனக்காய் கனவு சுமந்தவள்!
என் முகம் அமையும் முன்பே
எனக்காய் உயிர் சுமந்தவள்!
சொந்தங்கள் ஆயிரம் இருந்தாலும்
என் முதல் சொந்தம் நீதான் அம்மா!
பத்து மாதம் சுமந்து பல இன்னல்கள் ஏற்று
இரவு பகலாய் காத்து ஈன்றவர் தான் அம்மா.

**ஆர். ரித்திகா,** 3-ம் வகுப்பு

## இந்தியா



இந்திய நாடு நம் நாடு
இனிய எங்கள் தாய்நாடு
அழகு மலைகள் உள்ள நாடு
ஆறுகள் பாய்வது நம் நாடு
மழை வளம் உள்ளது நம் நாடு
மண் வளம் உள்ளது நம் நாடு
சிங்களர் தமிழர் வாழ்நாடு
இயற்கை வளங்கள் கொண்ட
நம் இந்திய நாடு
அனைவரும் இங்கு சகோதரராய்
இன்பமாய் வாழும் நாடு இதுவே.

**எல். ஆன்சி,** [illegible]

## கவிதை சாரல்கள்



அறிவு வளர்ந்தால் அறிவியல் வளரும்
அறிவியல் வளர்ந்தால் மருத்துவம் வளரும்
மருத்துவம் வளர்ந்தால் மருந்துகள் கண்டுபிடிக்க
முடியும்
மருந்துகள் கண்டுபிடித்தால் நோய்கள் குறையும்
நோய்கள் குறைந்தால் மக்கள் மகிழ்வர்
மக்கள் மகிழ்ந்தால் வீடு மகிழும்
வீடு மகிழ்ந்தால் நாடு மகிழும்
நாடு மகிழ்ந்தால் உலகம் மகிழும்
அறிவியல் என்பது அறிவு இயல் அன்றோ!

**கே.எஸ்.அபிஷா,** மாத்தூர்கோணம்

## சிறந்த முத்துகள்



குறையாதது - தாயின் அன்பு
பிரியாதது - நண்பர்களின் உறவு
உதவுவது - தந்தையின் பாதுகாப்பு
சிறப்பானது - இறைவனின் படைப்புகள்
விரும்பாதது - ஆபத்தான இடங்கள்
காரமானது - பகைவர்களின் அன்பு
சொல்லக்கூடாதது - அடுத்தவரிடம் இரகசியம்
வேதனைப்படக்கூடாதது - நண்பர்களின் உள்ளம்
செய்யக்கூடாதது - தீய செயல்கள்
செய்யக்கூடியது - நல்ல செயல்கள்
வாழ்க்கை என்பது - இன்பமும் துன்பமும்
வரக்கூடாதது - வாழ்வில் துன்பம்
பள்ளிக்கூடம் என்பது - முன்னேற்றத்தின் முதற்படி
ஆசிரியர் என்பவர் - சிறந்த அன்னை

**அகல்யா,** 8-ம் வகுப்பு, மாத்தூர்கோணம்

## மின்சாரம் மற்றும் பணத்தை சேமிக்க 5 எளிய வழிகள்



1. தேவைக்கேற்ப மின்சார விளக்குகளை எரிய செய்ய வேண்டும்.
2. வீட்டின் கார்னர் பகுதியில் பல்புகளை தொங்க விட வேண்டும்.
3. துணிகள் இஸ்திரி செய்யும் போது ஒரே நேரத்தில் அனைத்து துணிகளையும் இஸ்திரி போட முயற்சி செய்ய வேண்டும்.
4. தூங்கும் போது மின் விளக்குகள், கணினி மற்றும் மேஜை விளக்கு ஆகியவற்றை அணைத்து விட்டு தூங்க செல்ல வேண்டும்.
5. அனைத்து வீடுகளிலும் சோலார் முறையை பயன்படுத்த முன்வர வேண்டும்.

**எஸ். அபின்,** தர்குர்கோணம்

(பக்கம் 7 விடுகதைகள் விடை)

### விடுகதைகள்

1. நாக்கு
2. வானம், விண்மீன்
3. புகை
4. மின்னல், இடி, மழை
5. இமை
6. அத்திமரம்
7. வேர்க்கடலை
8. நீர்க்குமிழி
9. பூதக்கண்ணாடி
10. முட்டை

## பள்ளியில் விழுந்த விதை



அண்ணல் அம்பேத்கர் பள்ளியில் படித்த காலத்தில் மேல் சாதி என கருதப்பட்ட மாணவர்கள் மட்டுமே பெஞ்சுகளில் அமர அனுமதிக்கப்பட்டனர். தரையில் அமர விரும்பாதவர்கள் வீடுகளில் இருந்து கோணிப்பை போன்ற விரிப்புகளை கொண்டு வந்து பயன்படுத்தி விட்டு வீடுகளுக்கு திரும்ப கொண்டு செல்ல வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தாகம் எடுத்தால் அவர்கள் தாமாக எடுத்து குடிக்க கூடாது. மேல் சாதி மாணவர்கள் கையால் எடுத்து வாயில் விட்டு கொடுத்தால் மட்டுமே குடித்து கொள்ளலாம். பள்ளியில் நிலவிய இந்த சூழ்நிலைகள் அம்பேத்கர் மனதில் ஒரு ஆவேச புயலை தோற்றுவித்தன. ஒரு போராட்ட உணர்ச்சியை அவர் மனதில் விதைத்தன. அது தான் பின்னாளில் பெரிய மரமாய் தழைத்தோங்கி அம்பேத்கரை தாழ்த்தப்பட்ட மக்களின் ஒப்பற்ற தலைவராய் உயர்த்தியது.

**டி.அபிஷா,** கன்னியாகுமரி

## நம்பிக்கை கொள்



நண்பா! கண்ணில் வேண்டாம் சோகம்
நாளைய உலகம் உன்னால் மாறும்
நல்லதை நினைத்தால் இன்னல் தீரும்
நம்பிக்கை கொள் நன்மைகள் சேரும்!

இளமை பருவம் இரும்பு பருவம்
எழுந்து உழைத்தால் கிடைக்கும் எதுவும்
அசையும் உள்ளம் அசையாது இருந்தால்
உழைக்கும் எண்ணம் உள்ளத்தில் பரவும்!

வாழ்க்கை என்பது வானம் ஆகும்
வளர்ச்சி என்பது சிறகுகள் ஆகும்
சிறகுகள் தன்னை விரிக்க வேண்டும்
வானந்தன்னில் பறக்க வேண்டும்!

கனவுகள் கண்ணில் நிச்சயம் வேண்டும்
கனவுகளே உன்னை வெல்ல தூண்டும்
கடமையை செய்யும் ஆர்வம் வேண்டும்
காலங்கள் தோறும் வென்றிட வேண்டும்!

**J. ஆஷிகா,** வகுப்பு VII, மார்த்தாண்டம்



## தேசியக்கவி சுப்பிரமணிய பாரதியார்



**முன்னுரை** : கவிதைகளையும், காவியங்களையும் இயற்றி தமிழின் அழகுக்கு அழகூட்டுபவர்கள் கவிஞர்கள். பண்டைய தமிழ் இலக்கியங்கள் பசுந்தமிழில் சாதாரண மக்களும் புரிந்து கொள்ளக் கூடிய எளிய சொற்களால் கவிதை பாடிய முதல் கவிஞர் பாரதியார்.

**பிறப்பு** : சுப்பிரமணிய பாரதியார் 1882-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11-ஆம் நாள் எட்டையபுரத்தில் பிறந்தார். சின்னசாமி ஐயரும், இலக்குமி அம்மையாரும் பாரதியாரை பெற்று வளர்க்கும் பேறு பெற்றவர்கள் ஆவர்.

**தேசியக்கவி** : பாரத நாடு விடுதலை பெற வீரம் கொப்பளிக்கும் கீதங்களை பாடினார். வீரக்கவிதைகள் என்னும் விரல்களை விட்டு ஆட்டினார். தேசப்பற்று மிக்க கவிதைகள் "தேசியக்கவி" என்னும் மகுடத்தை இவர் தலையில் சூட்டின.

**இயற்றிய நூல்கள்** : பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, புதிய ஆத்திச்சூடி முதலிய பலப்பல நூல்களை இயற்றினார் பாரதியார்.

**தொண்டுகள்** : பாரதியார் தமிழ்த்தொண்டும், சமுதாயத் தொண்டும் ஆற்றியவர். "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே" என்னும் பாடலை இயற்றி பாடியுள்ளார்.

**முடிவுரை** : செந்தமிழ்தேனீ, சிந்துக்குத்தந்தை, கவிதைக்குயில், காடுமணக்க வரும் கற்பூர சொற்கோ என்று பாரதிதாசனால் போற்றிப் புகழப் பெற்ற பாரதியார் 1821-ம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார்.

**எஸ்.என். ஆர்த்தி,** 8-ம் வகுப்பு, தஞ்சாவூர்

## சமத்துவ நிமிடங்கள்



நமக்குள்ளே தான் எத்தனை எத்தனை வேற்றுமைகள்! வித்தியாசங்கள்! சிலர் ஏழை! சிலர் வசதியானவர்கள்! சிலர் உயரம்! சிலர் குட்டை! சிலர் வசதியான நாட்டில் பிறந்து வளர்கிறார்கள்! சிலர் வறிய நாட்டில் பிறந்து போராடுகிறார்கள்!

வேற்றுமைகளும் ஏற்றத்தாழ்வுகளும் பல்வேறு வகைகளில் உருவாகி விடுகின்றன. வசதி வாய்ப்புள்ளவர்கள் இந்த ஏற்றத்தாழ்வுகளை நிலைப்படுத்தி கொள்ள முயல்கின்றனர். அடித்தட்டு மக்கள் தங்கள் நிலையை கொஞ்சமாவது உயர்த்திக் கொள்ள போராடுகின்றனர். போராட முடியாது என்று துவண்டு போகின்றவர்கள் அடிமைகளாக மாறுகின்றனர். காலம் செய்த கோலமடா! கடவுள் செய்த குற்றமடா! என்று சோகப்பாட்டு பாடுகிறார்கள். எல்லாரும் இன்புற்று வாழ வேண்டும் என்பது தான் கடவுளின் விருப்பம். இயற்கையின் நியதி. அதற்காகத்தான் நாம் அறிவோடும், திறமையோடும் படைக்கப்பட்டிருக்கிறோம். நமக்கு தரப்பட்டிருக்கும் கொடைகளில் எல்லாம் மிகப்பெரிய கொடை 'நேரம்'. நேரத்தை பொறுத்தவரை இயற்கை நமக்கிடையே எந்த வேற்றுமையும் வைக்கவில்லை. எல்லாருக்கும் சம வாய்ப்பு. ஒவ்வொரு நாளும் 24 மணி நேரம். மொத்தம் 1440 அருமையான, பொன்னான நிமிடங்கள். பொன்னை விட உயர்ந்த இந்த நிமிடங்கள் தாம் தினமும் நமக்கு தரப்படுகின்ற முதலீடு மற்றும் வாய்ப்பு. ஒவ்வொரு நாளும் கடவுள் நம் ஒவ்வொருவர் வாசல் கதவையும் தட்டி எழுப்புகிறார். அவர் தந்த இந்த 1440 நிமிடங்களை பயன்படுத்த தெரிந்தவர்கள் கடவுளுக்கு நன்றி சொல்கின்றனர். அதை கோட்டை விடுபவர்கள் கடவுளை வசைபாடுகின்றனர்.

**என். சிப்பியா,** 7-ம் வகுப்பு, குளச்சல்

# விடுமுறை கால பயிற்சி

நாள் : மேய் 25-27, 2016 பங்கேற்பாளர்கள் : 8-ம் வகுப்பு மாணவர்கள் 42 நபர்கள்

## நடைபெற்ற பயிற்சிகள் :

- நல்ல பண்புகள்
- படிப்பது எப்படி?
- ஆளுமை திறன்
- கோழிகூடு செய்தல்
- கைவினை பொருட்கள் செய்தல்
- வீட்டுத்தோட்டம் அமைத்தல்
- ஜெபத்தின் முக்கியத்துவம்

## பயிற்சியில் சிதறியவை.....

செய்முறை :

ஒரு கண்ணாடி குவளையை எடுத்துக் கொள்ளவும். அதில் நல்ல தண்ணீரை ஊற்றுங்கள். உற்றுப்பாருங்கள். தெளிந்த தண்ணீராக இருக்கும்.

பின்னர் அத்தண்ணீரில் சிறிதளவு மண்ணை கலக்கவும். இப்போது தண்ணீரை பார்த்தால் தெளிந்த நீர் மாறி கலங்கிய கெட்ட தண்ணீராக மாறியிருக்கும். பின்னர் அக்குவளையில் மீண்டும் மீண்டும் நல்ல தண்ணீரை ஊற்ற வேண்டும். அப்படி ஊற்றும்போது கலங்கிய நீர் மாறி தெளிந்த நீராக மாறியிருப்பதை காண்பீர்கள்.

**இதிலிருக்கும் ஒரு உண்மை உங்களிடமுள்ள தீய பண்புகளை நல்ல பண்புகள் மூலம் மாற்ற முடியும்.**

- இலட்சியத்தை தேர்வு செய்யுங்கள்.
- திறமைகளை வளர்த்துக்கொள்ளுங்கள்.
- மனநிலையிலும், குணங்களிலும் ஏற்படும் வளர்ச்சி ஆளுமை வளர்ச்சி.
- மனிதனின் வன்முறையால் இயற்கை அழிக்கப்படுகிறது.
- அன்பு பொறுமை உள்ளது. அன்பு இழிவானதை செய்யாது.
- கைத்தொழில் ஒன்றை கற்றுக்கோள்
- தினமும் கீரை, உருளைகிழங்கு, மாம்பழம் உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

## நட்பு

சிரிக்கும் வரை கண்ணீர்...!
உதிரும் வரை பூக்கள்...!
மறையும் வரை நிலவு...!
மரணம் வரை நட்பு...!

\- அபிஷேக
8-ம் வகுப்பு, மாத்தூர்கோணம்.

## Vacational Training














Horse cart

## Xth Results - 2016
(Above 400 Marks)



T.C.Sofia, D.Anishma, S.N.Bisani Navin

R.Sneha Mary, V.U.Vijisha, J.P.Anisha

K.A.Abeenshya, Shiny S.Mohan, B.Vijitha

R.Reema, L.Lifla Mary, S.M.Shany

R.J.Sahaya Jenifer, P.Femi, S.R.Jenifa

P.Jenifa, S.Aswathi, S.Shermini

P.Thekarna Roy, S. Sohana, S.Sruthi

S.R.Anisha, G.P.Ramya, J.Ashlin Jebitha

P.Ajin Joel, M.Mahila, M.Sonifra

Resgin, S.Shalma, K.L.Jenisha, R.Rincy

# மிட்ஸ்-தளிர்கள் உலகம் காலண்டர் - 2017

| நிகழ்வுகள் | [illegible] | [illegible] நாகர்கோவில் |
|---|---|---|
| சிறப்பு பயிற்சி | ஜனவரி 16, திங்கள் | ஜனவரி 21, சனி |
| சிறப்பு பயிற்சி | பிப்ரவரி 11, சனி | பிப்ரவரி 18, சனி |
| சிறப்பு பயிற்சி | மார்ச் 11, சனி | மார்ச் 18, சனி |
| சிறப்பு பயிற்சி | ஏப்ரல் 1, சனி | ஏப்ரல் 1, சனி |
| நன்றி கடிதம் | ஏப்ரல் 3, திங்கள் (ஆற்றூர், செல்லங்கோணம்) | |
| நன்றி கடிதம் | ஏப்ரல் 5, புதன் (பனச்சமூடு, உண்ணாமலைகடை) | |
| நன்றி கடிதம் | ஏப்ரல் 6, வியாழன் (நடைக்காவு, பாலவிளை) | ஏப்ரல் 8, சனி (நாகர்கோவில் I) |
| நன்றி கடிதம் | ஏப்ரல் 7, வெள்ளி (மேக்கோடு, சூரியகோடு, கிராத்தூர்) | ஏப்ரல் 10, திங்கள் (பூதபாண்டி, மந்தாரம்புதூர், அகஸ்தீஸ்வரம், நாகர்கோவில் II) |
| 2016-17-ல் 9,10,11,12 வகுப்பு மாணவர்களுக்கான பயிற்சி | மே 13, சனி | |
| விடுமுறைகால பயிற்சி (வகுப்பு : 8) | மே 22-24 திங்கள் - புதன் | |
| கல்வி உதவித்தொகை வழங்குதல் | மே 24 புதன் (அனைவரும்) | |
| சிறப்பு பயிற்சி | ஜூன் 26, திங்கள் | ஜூன் 17, சனி |
| சிறப்பு பயிற்சி | ஜூலை 8, சனி | ஜூலை 22, சனி |
| சிறப்பு பயிற்சி | ஆகஸ்ட் 25, வெள்ளி | ஆகஸ்ட் 12, சனி |
| சிறப்பு பயிற்சி | செப்டம்பர் 9, சனி | செப்டம்பர் 23, சனி |
| சிறப்பு பயிற்சி | அக்டோபர் 14, சனி | அக்டோபர் 21, சனி |
| நன்றி கடிதம் | அக்டோபர் 16, திங்கள் (நடைக்காவு, பாலவிளை) | |
| நன்றி கடிதம் | அக்டோபர் 18, புதன் (ஆற்றூர், செல்லங்கோணம்) | |
| நன்றி கடிதம் | அக்டோபர் 19, வியாழன் (பனச்சமூடு, உண்ணாமலைகடை) | அக்டோபர் 23, திங்கள் (நாகர்கோவில் I) |
| நன்றி கடிதம் | அக்டோபர் 20, வெள்ளி (மேக்கோடு, சூரியகோடு, கிராத்தூர்) | அக்டோபர் 25, புதன் (பூதபாண்டி, மந்தாரம்புதூர், அகஸ்தீஸ்வரம், நாகர்கோவில் II) |
| குழந்தைகள் தின விழா | நவம்பர் 4, சனி | நவம்பர் 18, சனி |
| கிறிஸ்மஸ் விழா | டிசம்பர் 2, சனி | |


E-mail : mids.marthandam@gmail.com



Santhom Mkt. Ph : 04651 - 270973